1984 மார்ச் 7]

சிறுதொழில் துவங்க முன்வருவோரை ஊக்குவிக்க சுழல் நிதி ஏற்படுத்தும் திட்டம்.

210—(*வினா எண் 20815.)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுதொழில் துவங்க முன்வருவோரை ஊக்குவிக்க சுழல் நிதியை எற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்குச் சுழல் நிதி வழங்குவது சம்பந்தமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்தச் சுழல் நிதித் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். இந்தத் திட்டம் செயல் படுத்தப்படும்போது இதற்கு எவ்வளவு முதலீடு செய்யப்படும் ? மாவட்டங்களிலே தொழில் தொடங்குவதற்கு இந்தச் சுழல் நிதியிலிருந்து உதவி செய்யப்படுமா ? அல்லது ஏதாவது குறிப்பிட்ட தொழில்களுக்குத்தான் இதிலிருந்து உதவி செய்யப்படும் என்று விதி வகுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே, மத்திய அரசால் பின்தங்கிய வட்டங்கள் என்பதாக அறிவிக்கப் பட்ட 33 வட்டங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழில் களுக்கும் ஏற்கெனவே உள்ள தொழில்களை விரிவுபடுத்துவதற்கும் 15 சதவீதம் மைய மூலதன மானியம் வழங்கப்படுகிறது. சிட்கோ-தமிழ்நாடு சிறு தொழில் முதலீட்டு நிறுவனம் மற்றும் சிப்காட் மூலம் இந்த மானியம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் சிறுதொழில்களுக்கு மானியம் வழங்கும் பணியைத் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனமும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனமும் மேற்கொண்டு வருகின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே சொல்லுகின்ற விவரங்களிலிருந்து எனக்குச் சரியான பதில் கிடைக்கவில்லை. நான் தெரிந்து கொள்ள விரும்புவது, இந்தச் சுழல் நிதி என்கிறபோது, மொத்தமாக, கார்ப்பரேஷன் போன்ற ஏதாவது ஒரு அமைப்பு ஏற்படுத்தப் படுமா ? விண்ணப்பிக்கின்றவர்களுக்கு எந்த எந்தத் தொழிலுக்கு உதவி அளிக்கப்படும் ? மத்திய அரசால், சில மாவட்டங்கள் அல்லது வட்டாரங்கள் தொழில் துறையில் பின்

தங்கியவை என்று அறிவித்திருப்பதாகச் சொன்னார்கள். அது தவிர நம்முடைய அரசு சில வட்டங்களைப் பின்தங்கிய பகுதி என்று அறிவித்துள்ளது. அந்த வட்டாரங்களுக்கும் இப்படிப்பட்ட சலுகைகள் கிடைக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் சிட்கோ மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சில சமயங்களில் சிட்கோ நிறுவனத்திற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படுவதன் காரணமாக மத்திய அரசை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசிலிருந்து நிதி கிடைக்க 3 முதல் 8 மாதங்கள் வரை காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, இந்த தாமதத்தினால் தடை ஏற்படாமல் இருக்க சுழல் நிதி அமைத்து, அவர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, சிறுதொழில் தொடங்க முன் வருவோருக்கு ஊக்கமளிக்கும் திட்டத்தின் கீழ் சுழல் நிதியிலிருந்து உதவி அளிப்பதில் காலதாமதம் ஏற்பட காரணம் என்ன? அதைத் தவிர்க்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவரவர்களே, மத்திய அரசிடமிருந்து நிதி கிடைப்பதில் 3 முதல் 8 மாதம் வரை காலதாமதம் ஏற்படுவதால் தொழில் தொடங்க முன்வருவோருக்கு உடனடியாக நிதி உதவி அளிக்க முடியவில்லை. எனவே இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த சிட்கோ நிறுவனத்தில் 60 இலட்சம் ரூபாய் சுழல் நிதி ஏற்படுத்துவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மற்றும் சிப்காட் நிறுவனம் ஆகியவற்றிற்கும் சுழல் நிதித் திட்டத்தை விரிவுபடுத்த அரசு பரிசீலனை செய்கிறது.

போக்குவரத்துக் கழகங்களில் 1981 ஜனவரி முதல் 1982 டிசம்பர் வரையிலான உபயோகமற்றப் பேருந்துகளின் எண்ணிக்கை.

123—(*வினா எண் 17232)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து அரசு போக்குவரத்துக் கழகத்திலும் 1981 ஜனவரி முதல் 1982 டிசம்பர் வரை உபயோகமற்ற பேருந்துகள் எத்தனை?

(ஆ) பள்ளிகளுக்கு மான்ய விலையில் வழங்கியவை எத்தனை?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) 1410

(ஆ) 85